பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 09 2025 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

*தலைப்புச் செய்திகள்*

- கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உத்தராகண்ட் மாநிலத்திற்கு ஆயிரத்து 200 கோடி ரூபாய் நிவாரண உதவியை பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
- இந்தியா - மொரிஷியஸ் இடையே அறிவியல் தொழில்நுட்பத்துறையில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட ஏழு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.
- நிலக்கரிக்கான ஜிஎஸ்டி வரி கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களின் பயன்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு கிடைக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- மகாராஷ்ட்ராவின் ஆளுநராக குஜராத் ஆளுநர் திரு ஆச்சாரியா தேவ்ரத்திற்கு கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- பார்வை குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான *16* பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

\- இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள ஆயிரத்து 200 கோடி ரூபாயை பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

தமது வாராணசி பயணத்தை முடித்துக்கொண்டு, இன்று பிற்பகல் டேராடூன் சென்ற பிரதமர், கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டபின், இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

மழை வெள்ளத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் பிரதமர் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரையும், மீட்புப்பணிகளை மேற்கொண்டுவரும் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினரையும் பிரதமர் சந்தித்து பேசினார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உத்தராகண்ட் மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<<>>>>

இந்தியா - மொரிஷியஸ் இடையே அறிவியல் தொழில்நுட்பத்துறையில் இணைந்து செயல்படுவதற்கான

புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட ஏழு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தானது.

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள மொரிஷியஸ் பிரதமர் திரு நவீன் சந்திர ராம்கூலம், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இருநாடுகளிலும் உள்ள பெருங்கடல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையிலான அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக்கான ஒப்பந்தம், மத்திய பணியாளர் நலத்துறையின் கீழ் இயங்கும் கர்மயோகி பாரத் இயக்கம் மற்றும் மொரிஷியஸ் பொதுச்சேவைகளுக்கான நிர்வாகத்துறை ஒப்பந்தமும் இன்று கையெழுத்திடப்பட்டது.

மின்சாரத்துறையில இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு, இந்திய நிதியுதவியுடன் மொரிஷியஸில் மேற்கொள்ளப்படும் இரண்டாவது கட்ட மேம்பாட்டுத் திட்டங்கள், நீர்நிலைகளை ஆய்வு செய்வதற்கான ஒப்பந்தம் உள்ளிட்டவையும் கையெழுத்தாயின.

விண்வெளி ஆராய்ச்சித்துறையில் தொலைத்தொடர்பு மற்றும் செயற்கைக்கோள் ஏவுதளம் அமைப்பதற்கான

புரிந்துணர்வு ஒப்பந்தமும் இன்று இந்தியா – மொரிஷியஸ் பிரதமர்கள் முன்னிலையில் கையெழுத்தாயின.

<<<<<<<>>>>

இந்தியாவும் – மொரிஷியஸூம் கடற்கொள்ளை மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற சவால்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து வருவதாக வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்டை நாட்டிற்கு முன்னுரிமை என்ற இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அங்கமாக மொரிஷியஸ் திகழ்வதாக கூறினார்.

மஹா சாகர் என்ற தொலைநோக்கு திட்டத்திலும் மொரிஷியஸூக்கு முக்கிய இடம் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கலாச்சாரம், நாகரீகம் உள்ளிட்டவற்றில் இந்தியா – மொரிஷியஸ் இடையே தனித்துவம் மிக்க உறவு வேரூன்றி இருப்பதாகவும் அவர் கூறினார்.

பொருளாதாரம், வர்த்தகம், நிதி மற்றும் முதலீடுகளில் வலுவான உறவுகள் நீடித்து வருவதாகவும் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இருநாட்டு மக்களுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்தியா முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பு மேம்பட்டு வருவதாகவும் திரு விக்ரம் மிஸ்ரி கூறினார்.

<<<<<<<<>>>>

நிலக்கரி உற்பத்தித்துறையில் சரக்கு மற்றும் சேவை வரிக்கான கட்டமைப்பில் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கையின் பயன்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கும் கிடைக்கும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில், புதிய வரி கட்டமைப்பில், சரக்கு மற்றும் சேவை வரியை ஈடுகட்டும்

செஸ் வரி முற்றிலுமாக நீக்கப்பட்டு, தற்போதுள்ள ஐந்து சதவீத வரி 18 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

<<<<<<<<<>>>>

சர்க்கரை உற்பத்தித்தொழில் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய சர்க்கரை மற்றும் உயிரி எரிசக்தி மாநாட்டில் பேசிய அவர், 20 சதவீதம் எத்தனால் கலந்த எரிபொருளை பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு உயிரி எரிசக்தித்துறை முக்கிய ஆதாரமாக விளங்குகிறது என்றும் கூறினார்.

கரிம எரிபொருட்களின் இறக்குமதியை குறைத்து, காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு நிதின்கட்கரி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, 11 ஆண்டுகளுக்குமுன், ஒன்று புள்ளி ஐந்து சதவீதம்

எத்தனால் கலந்த எரிபொருள் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த 11 ஆண்டுகளில் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இது தற்போது 20 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் கூறினார்.

பாரம்பரிய பயிராக இருந்துவந்த கரும்பு, தற்போது நாட்டின் பொருளாதாரம் மற்றும் எரிசக்தியின் ஆதாரமாக விளங்குகிறது என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<<<>>>>

மகாராஷ்ட்ராவின் ஆளுநராக குஜராத் ஆளுநர் திரு ஆச்சாரியா தேவ்ரத்து-க்கு கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், குடியரசு துணைத்தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து, மகாராஷ்ட்ரா மாநிலத்திற்கான ஆளுநர் பொறுப்பு திரு ஆச்சாரியா தேவரத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தில் 27 கைத்துப்பாக்கிகள் மற்றும் 470 கேட்ரேஜிகளை பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

அம்மாநிலத்தின் Fazilka என்ற இடத்தில் எல்லை தாண்டிய கடத்தல்காரர்களை தடுக்கும் நோக்கில் எல்லை பாதுகாப்புப்படையினரும், பஞ்சாப் காவல்துறையினரும் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையின்போது இவை பறிமுதல் செய்யப்பட்டன.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தீவிரவாத குழுக்களுக்காக பாகிஸ்தானில் இருந்து இந்த துப்பாக்கிகள் கடத்தி வரப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமிர்தசரஸில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு புலனாய்வு தேடுதல் நடவடிக்கையின்போது, எல்லைதாண்டிய கடத்தல்காரர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து கைத்துப்பாக்கிகளும், ஐந்து லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஹவாலா பணமும் பறிமுதல் செய்யப்பட்டது.

கடத்தல்காரர்களின் ஒட்டுமொத்த செயல்பாடுகளையும் ஒடுக்கும் நோக்கில் புலனாய்வுப்பணிகள் பஞ்சாப் மாநிலத்தில் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<<>>>>

நேபாளம் சந்தித்து வரும் சவால்களுக்கு அந்நாட்டின் அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தீர்வுகாண்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தாம் எடுத்து வருவதாக அதிபர் திரு ராமச்சந்திர பவ்டேல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசியல் ரீதியாக நாடு சந்தித்துவரும் பிரச்சினைகளுக்கு ஜனநாயக ரீதியிலாக தீர்வுகாண்பதற்கும், சட்டம் – ஒழுங்கை உறுதி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

போராட்டம் நடத்திவரும் மக்களின் கோரிக்கைகளை பரிசீலித்து உரிய தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளும் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் அமைதியையும். அரசியல் நிலைப்பாட்டையும் உறுதி செய்ய அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு ராமச்சந்திர பவ்டேல் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பார்வை குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான *16* பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி பெங்களுரு மற்றும் தில்லியில், நவம்பர் மாதம் *11*-ஆம் தேதி தொடங்கி, *25*-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

----------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி ஷர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், *13-21, 21-13, 21-14* என்ற செட்கணக்கில் சீன தைபே-யின் ***Chen Su Yu***-ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்று *Ashmita Chaliha*-வும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், *15-21, 21-18, 21-10* என்ற செட்கணக்கில் இந்தியாவின் பிரணாயை வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி, *21-19, 12-21, 21-14* என்ற செட்கணக்கில் ஜப்பானின் *Kodai Naraoka* -ஐ வென்றார்.

<<<<<<<END>>>>>>